பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 02 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>லைப்புச் செய்திகள்</u>

**1.** செஷல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹெர்மேனியுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று பேச்சு நடத்துகிறார்.

**2.** பிஜேபி தலைமையிலான மத்திய அரசின் சிறந்த நிர்வாக நடைமுறைகள் பின்தங்கியுள்ள மாநிலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** இந்தியா - கனடா இடையே பரஸ்பரம் பாதுகாப்பு, ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**4.** போர்ச்சுகள் அதிபர் தேர்தலில் திரு. அண்டனியோ ஜோஷ் செகுரோ வெற்றி பெற்றுள்ளார்.

**5.** சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் சர்விசஸ் அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

செஷல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹெர்மேனியுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று பேச்சு நடத்துகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது இருதரப்பு வர்த்தகம், பரஸ்பரம் நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர் செஷல்ஸ் அதிபர், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை இன்று மாலை சந்தித்துப் பேசுகிறார்.

<<<<>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசின் சிறந்த நிர்வாக நடைமுறைகள் பின்தங்கியுள்ள மாநிலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கட் மாநிலம் நவ்ராய்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், பிஜேபி ஆட்சிக் காலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு, வளம், ஸ்திரத்தன்மை ஆகிய 3 அம்சங்களைக் கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பை மையமாக கொண்ட நடவடிக்கைகள், உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு உள்ளிட்ட திட்டங்கள் நக்சல் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவியதாக திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

இந்தியா - கனடா இடையே பரஸ்பரம் பாதுகாப்பு, ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், அந்நாட்டுப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு ஆலோசனை அதிகாரியை சந்தித்துப் பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது தேசியப் பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்கத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு

முன்னுரிமை அளிப்பது என ஒப்புக்கொள்ளப்பட்டதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

இதுகுறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஏதுவாக இரு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் குழு அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைபர் பாதுகாப்புக்கான கொள்கைகளை வகுப்பது மற்றும் பரஸ்பரம் அது சார்ந்த தரவுகளை பகிர்ந்துகொள்வது எனவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

<<<<>>>>

வெள்ளத் தடுப்பு மேலாண்மை குறித்த ஒருநாள் பயிலரங்கு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய நீர்வள ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் பயிலரங்கில் வெள்ள அபாயம் குறித்த முன்னறிவிப்புகள், வெள்ளத் தடுப்பிற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை தயார் செய்தல் மற்றும் மதிப்பீடு குறித்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக மத்திய ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள

ஆணையத்தின் சேவைகள் மற்றும் புதிய முன்முயற்சிகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிலரங்கில் வெள்ள பாதிப்பின்போது உணவு தயார் செய்யும் பணியை திறம்பட மேற்கொள்வது, தரமான உணவு மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவது மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் பயிற்சி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளதெரிவிக்கிறார்.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

சாந்திபூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நெசவாளர்களின் வருவாயை அதிகரிப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

உற்பத்தி, வடிவமைப்பு, சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

நூல் கொள்முதலுக்காக மத்திய அரசு வழங்கிய 500 கோடி ரூபாயை முறையாக மாநில அரசு செலவிடவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

நாடியாவில் மாபெரும் கைத்தறி தொகுதி அமைப்பதற்காக 200 கோடி ரூபாய் கூடுதல் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் ரயில் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சியூரி சாலையில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம், குமார்புர் மேம்பாலம், அசன்சோர்-பொகாரோ இடையேயான புதிய ரயில் சேவை ஆகியவற்றை காணொலி மூலம் அவர் நேற்று தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலத்தில் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் ரயில்வே உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு 14 ஆயிரத்து 205 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது 2009 முதல் 2014-ம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் இது 3 மடங்கு அதிகம் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

போர்ச்சுகள் அதிபர் தேர்தலில் திரு. அண்டனியோ ஜோஷ் செகுரோ வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற அதிபர் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளார்.

அந்நாட்டில் நிலையான அரசு அமையாத சூழல் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் 3 தேர்தல்கள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

தொழில்துறையின் வளர்ச்சிக்காக மத்திய பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

சிறு தொழில்களுக்காக **10** ஆயிரம் கோடியில் நிதியம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று சிறுதொழில் செய்து வரும் திரு. சுகுமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் தகுதியுடைய வாக்காளர்கள் தங்களது பெயரை சேர்ப்பதற்கு நிரந்தர வசிப்பிட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் எழுதியுள்ள கடிதத்தில் **1999-**ம் ஆண்டு நவம்பர் **2**ஆம் தேதி அம்மாநில அரசு பிறப்பித்த அரசாணை அடிப்படையில் இந்த சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் சர்விசஸ் அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

அசாமில் நேற்று நடைபெற்ற இறுதி போட்டியில், சர்விசஸ் அணி **1-0** என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

இந்த வெற்றி மூலம் சர்விசஸ் அணி **8** - வது முறையாக சந்தோஷ் கோப்பையை வென்றுள்ளது.

---------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் **Babuta** - இளவேனில் வாலறிவன் இணை தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்புக் குழு **10** மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய உள் அரங்கு தடகள போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது.

--------

அபுதாபி மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டி வண்ணமிகு நிகழ்ச்சிகளுடன் அபுதாபியில் நேற்று தொடங்கியது.

**இம்மாதம் 14 - ம் தேதி வரை 20 பிரிவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில், 92 நாடுகளை சேர்ந்த 25 ஆயிரத்திற்கும் அதிகமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.**

**இப்போட்டியின் நிறைவுநாள் நிகழ்ச்சி இம்மாதம் 15 - ம் தேதி நடைபெறுகிறது.**

**<<<<The End>>>>**